சர்வீஸ்களும், டெல்லியிலிருந்து சென்னைக்கு நான்கு சர்வீஸ்களும் இருக்கின்றன என்றும் இதற்கு மேல் விடுவதற்கு வாய்ப்பு இல்லை என்றும் காரணம் இருப்புப்பாதை தரம் போதுமானதாகயில்லை, எரிபொருள்கள், ரெயில் பெட்டிகள் போதுமான அளவிற்கு இல்லை என்றும் எனவே தற்போது அதைப்பற்றி நாங்கள் பரிசீலிக்க முடியாது என்றும் சொல்லி இருக்கிறார்கள்.

திரு. மி. வின்செண்ட்: 1979-ல் மத்திய ரெயில்வே அமைச்சர் அவர்கள் கன்னியாகுமரி-காஷ்மீர், நாகர்கோவில்-டெல்லி, நாகர்கோவில்-பாம்பே இவற்றிற்கு ரெயில் விடப்படும் என்று கன்னியாகுமரியில் அறிவித்தார்கள். ஆனால் வருடங்கள் இரண்டு ஆகியும் அமைதி காக்கப்படுகிறது, எனவே இது குறித்து மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: அப்படிப்பட்டதொரு அறிவிப்பை மத்திய அமைச்சர் அவர்கள் செய்திருப்பார்களேயானால் இன்றையதினம்கூட அதை ஞாபகமூட்டுகிற வகையில் மத்திய அரசுக்கு நாம் எழுதுவதில் எந்த விதமான தவறும் இருக்காது. அதை நாம் செய்யலாம்.

ஆத்தூரில் இருந்து தென்குமரை வரை பேருந்து விடும் திட்டம்

*வினா எண் 924—திருமதி தா. இராசாம்பாள்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தலைவாசல் தொகுதியில் ஆத்தூரிலிருந்து சார்வாய்புதூர் கிராமத்தின் வழியாக சார்வாய் வடகுமரை தென்குமரை வரை பேருந்து வழித்தடம் அனுமதித்திருந்தும் பேருந்துகள் எதுவும் செல்வதில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் அந்த வழித் தடத்தில் பஸ்கள் விட அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. சு முத்துசாமி: (அ) & (ஆ) பஸ் உரிமையாளர்கள் எச்சரிக்கை செய்யப்பட்டு, தற்போது ஆத்தூர்-சார்வாய், வடகுமரை, தென்குமரை வழித்தடத்தில் பேருந்துகள் சார்வாய்புதூர் கிராமத்தின் வழியாக சரிவர ஓடிக்கொண்டிருக்கின்றன.

6 திருமதி தா. இராசாம்பாள்: அங்கே பள்ளிக்கூடத்தில் படிக்கும் மாணவர்கள் ஆத்தூர் சென்று வரவும், அங்குள்ள பெண்கள் பிரசவ காலத்தில் அவசரமாக ஆத்தூர் மருத்துவமனைக்கு வரவேண்டியிருப்பதாலும், அதோடு வியாபாரம் சம்பந்தமாக ஆத்தூர் வரவும் அங்கே அந்தப் பகுதி மக்களுக்கு பஸ் போக்குவரத்து வசதி இல்லை. தனியாருக்கு பர்மிட் வழங்கியும் அடிக்கடி பஸ்களை நிறுத்திவிடுவதால் அங்குள்ள மக்கள் மிகவும் பாதிக்கப்பட்

டிருக்கிறார்கள். ஆகவே ஆத்தூரிலிருந்து சார்வாய்புதூர், சார்வாய் வடகுமரை தென்குமரை வரை பஸ் விடுவதற்கு பர்மிட் அளித்து அந்த வழிகளில் பஸ்கூட இருக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: இப்போது அனுமதித்துள்ள வழித் தடத்தில் அந்தத் தனியார் துறை பேருந்துகள் சரியாக இயங்கவில்லை என்ற தகவல் கிடைத்தவுடன் அங்குள்ள அதிகாரிகள் அவர்களைப் பார்த்து நிச்சயமாக சரியாக ஓட்டியாக வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறார்கள். அதன்படி ஓடிக்கொண்டிருக்கிறது. இதில் மேலும் வசதி செய்ய வேண்டுமென்ற நிலைமை இருக்குமானால் அதிகாரிகள் பார்த்துவிட்டு தேவை என்று சொன்னால் கூடுதல் பேருந்துகள் விடுவதுபற்றி அல்லது இன்னும் அதிகமான எண்ணிக்கையில் ட்ரிப்ஸ் விடுவதுபற்றி அரசு ஆலோசனை செய்யும்.

திருமதி தா. இராசாம்பாள்: தற்போது நீண்டநாட்களாக அனுமதி பெற்று அங்கே பஸ் விடாமல் அடிக்கடி இப்படி நிறுத்திவிடுவதால் அங்குள்ள மக்கள் மிகவும் பாதிக்கப்படுவதால் ஒரு தேதி குறிப்பிட்டு இந்தத் தேதிக்குள் கண்டிப்பாக அங்கே ரெகுலராக பஸ் விடப்படும் என்ற உத்தரவாதத்தை இந்த அரசு அளிக்குமா? அங்குள்ள மக்கள் இதுபற்றி என்னிடம் பல முறை கூறியுள்ளார்கள். அதை நான் அதிகாரிகளிடம் தெரிவித்தேன். அது பயன் அளிக்கவில்லை. அவர்கள் அடிக்கடி உண்ணாவிரதம், ஸ்டிரைக் என்று அறிவித்துக் கொண்டிருப்பதால் இதை உடனடியாகக் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: இந்தக் கருத்தை இவர்கள் எடுத்து வைத்த பின்புதான் அதைப்பற்றி அங்குள்ள அதிகாரிகளிடம் கேட்டபோது, அந்தத் தகவல் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டு தனியார் பஸ்காரர்களைப் பார்த்து சரியாக வண்டி இயங்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். மீண்டும் தவறு நடக்குமானால் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும், தேவையான வசதியும் செய்து தரப்படும்.

சேலத்திலிருந்து திண்டிவனத்திற்கு புதிய இருப்புப்பாதை அமைக்கும் திட்டம்.

*வினா எண் 925—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் இரும்பாலை திட்டத்தை முன்னிட்டு சேலத்திற்கும் திண்டிவனத்திற்கும் திருவண்ணாமலை, செஞ்சி வழியாக புதிய இருப்புப்பாதை அமைக்கும் திட்டத்தை செயல்படுத்த மாநில அரசு, மத்திய அரசிற்கு பரிந்துரை செய்துள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: இல்லை.